©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 22] சென்னை, புதன்கிழமை, ஜூன் 9, 2010
வைகாசி 26, திருவள்ளுவர் ஆண்டு – 2041

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (3டி) எண் 21, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, 13 அக்டோபர் 2009.]*

**நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சகம் (நுகர்வோர் விவகாரங்கள் துறை) ஆணை, புதுடில்லி, 25 செப்டம்பர் 2009.**

**எஸ்.ஓ. 2461(E).**–1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1995) 3ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு, 2002ஆம் ஆண்டு குறிப்பிடப்பட்ட உணவுப் பொருட்களுக்கு (உரிமம் பெறுதல், இருப்பு வரையறை, கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை) நீக்குதல் ஆணையில், மேற்கொண்டும் திருத்தம் செய்வதற்கு பின்வரும் ஆணையை இதனால் பிறப்பிக்கிறது.

1. (1) இவ்வாணை, 2009ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப்பொருட்களுக்கு (உரிமம் பெறுதல், இருப்பு வரையறை, கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை நீக்குதல்) (ஆறாவது திருத்தம்) ஆணை என்று பெயர் பெறும்.

(2) இந்த ஆணை 1 அக்டோபர் 2009ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. 2002ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு (உரிமம் பெறுதல், இருப்பு வரையறை மற்றும் கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை நீக்குதல்) ஆணையில், விற்பனைக்காக கொள்முதல் செய்தல், எடுத்துச் செல்லுதல், விற்பனை, வழங்கல் அல்லது விற்பனைக்காக இருப்பு வைத்தல் ஆகியவை தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சொற்கள் மற்றும் தொடர்கள், சமையல் எண்ணெய்கள், சமையல் எண்ணெய் வித்துக்கள், அரிசி, பயறு வகைகள், நெல் ஆகியவற்றிற்காக மேற்கொண்டும் 30–9–2010 கால அளவு வரையில் அல்லது மேற்கொண்டும் ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரையில், இவற்றில் எது முந்தையதோ அதுவரை நிறுத்தி வைக்கப்பட வேண்டும்.

3. இந்த ஆணையில் குறிப்பிடப்பட்ட எதுவும் மாநிலத்திற்கு வெளியே உள்ள இடங்களுக்கு, சமையல் எண்ணெய்கள், சமையல் எண்ணெய் வித்துக்கள், அரிசி, பயறு வகைகள், நெல் ஆகியவற்றை எடுத்துச் செல்வதை, விநியோகிப்பதை அல்லது விற்பனை செய்வதை பாதிக்காது அல்லது இப்பொருள்களை இறக்குமதி செய்வதற்கு இது பொருந்தாது.

ஆனால், மத்திய அரசு அல்லது மாநில அரசுகள் இறக்குமதியாளர்களுக்கு வரப்பெற்ற இப்பொருள்களின் அளவு மற்றும் அவர்கள் வைத்துள்ள இருப்புகளை அறிவிக்குமாறு அவர்களுக்கு உத்தரவிடலாம்.

**விளக்கம்:**—மொத்த விற்பனையாளர், அல்லது சில்லறை விற்பனையாளர் அல்லது வணிகர் இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய், சமையல் எண்ணெய் வித்துக்கள், அரிசி, பயறு வகைகள், நெல் ஆகியவற்றை பொறுத்தமட்டில் அவருடைய இருப்பைத் தெரிவித்தல், இருப்பு வரையறையைக் கணக்கிடுவதற்காக அவை நீக்கப்படவேண்டும்.

4. 2002ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு உரிமம் பெறுதல், இருப்பு வரையறை மற்றும் கொண்டு செல்வது குறித்த கட்டுப்பாட்டினை நீக்குதல் ஆணையின் ஏனைய அனைத்து விதித்துறைகளும், மேலே 2ஆம் பகுதியில் குறிப்பிட்ட கால அளவுக்கு தொடர்ந்து செயலில் இருக்கும்.

**ராகேஷ் கக்கர்,**
*மத்திய அரசு கூடுதல் செயலாளர்.*

**கே. சண்முகம்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.